தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**05.08.2013**

## ஆந்திர பொன்னி நெல்லுக்கு விவசாயிகள் வரவேற்பு

கடலூர் மாவட்டத்தில் ஆந்திர பொன்னி நெல்லுக்கு விவசாயிகளிடம் வரவேற்பு உள்ளதால், சம்பா பட்டத்தில் போலி விதை நெல் விற்பனையைத் தடுக்க வேளாண் துறை பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

கடலூர் மாவட்டத்தில் தனியார் விதை விற்பனை நிலையங்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இது குறித்து விதை ஆய்வாளர் பார்த்தசாரதி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

சேத்தியாத்தோப்பு, புவனகிரி, காட்டுமன்னார்கோவில் பகுதியில் உள்ள தனியார் விதை நிறுவனங்களை ஆய்வு செய்து விதை மூட்டைகளில் உள்ள உற்பத்தி நிறுவனங்கள், அதில் பொருத்தப்பட்டுள்ள சான்று அட்டைகள் போன்றவற்றின் உண்மைத் தன்மை ஆய்வு செய்யப்பட்டது.

தனியார் விதை விற்பனை நிலையங்களில் விதை இருப்பு, விற்பனை, விதை முளைப்பு சோதனையிட்டு விவசாயிகள் பார்வையில் படும்படி விதைகளை வைக்க அறிவுறுத்தப்பட்டது.

விதைச் சட்டத்தை கடைபிடிக்காத விற்பனை நிலையங்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

விற்பனை செய்யும்போது கண்டிப்பாக விலைப்பட்டியல் வைக்க வேண்டும். விதைக் குவியலில் இருந்து மாதிரி எடுத்து கடலூர் விதை பரிசோதனை நிலையத்துக்கு முளைப்புத் திறன் குறித்து பகுப்பாய்வுக்கு அனுப்பப்பட்டது.

ஆந்திர பொன்னி என்றழைக்கப்படும் பி.பி.டி.5204 என்ற நெல் விதை விவசாயிகளிடம் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது.

விற்பனையாளர்கள் போலியான ஆந்திர விதை நிறுவனங்களிடம் இருந்து கொள்முதல் செய்து விற்பனை செய்ய வாய்ப்பு உள்ளது. விவசாயிகள் இது குறித்து அறியும் பட்சத்தில் 9443666937 என்ற எண்ணுக்கு தொடர்பு கொள்ளலாம்.

**16-ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் வரும் ஆகஸ்ட் 16-ஆம் தேதி விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெற உள்ளதாக ஆட்சியர் லி. சித்ரசேனன் அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு: காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த வேளாண்மை பெருமக்களுக்கு விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் வரும் ஆகஸ்ட் 16-ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்கு நடைபெற உள்ளது.

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூட்ட அரங்கில் நடைபெறும் இக்கூட்டத்தில் விவசாய பெருமக்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு முக்கிய வேளாண்மைத் துறை மற்றும் சார்பு துறைகள் தொடர்பான கோரிக்கைகள் குறித்து மனுவாக அளிக்கலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**மானாவாரி நிலங்களில் நிலக்கடலை, உளுந்து  பயிரிட அறிவுறுத்தல்**

காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள மானாவாரி நிலங்களில் நிலக்கடலை, உளுந்து உள்ளிட்ட பயிர்களை பயிரிட்டு அதிக லாபம் ஈட்டலாம் என்று வேளாண்துறை அறிவித்துள்ளது.

இது குறித்து வேளாண் இணை இயக்குநர் வே. செப்ந்தரராஜன் கூறியது: காஞ்சிபுரம் மாவட்டத்தில் தொடர்ந்து பரவலாக மழை பெய்து வருகிறது. இது மானாவாரி பயிர் சாகுபடிக்கு மிகவும் ஏற்றது. மானாவாரி நிலங்களிலும், வடிகால் வசதியுள்ள பாசன நிலங்களிலும் இந்த தட்பவெப்பநிலைக்கு மானாவாரி பயிர்களான நிலக்கடலை, உளுந்து, பச்சைப்பயிறு, காராமணி, கேழ்வரகு ஆகிய பயிர்கள் நன்றாக வளரும் சூழல் உள்ளது. மிகவும் எளிய செலவில் வளர்ந்து, வறட்சித் தாங்கி, பூச்சி நோய்களால் அதிக பாதிப்பு இல்லாமல் மானாவாரி விவசாயிகளுக்கு குறுகிய காலத்தில் நல்ல வருவாய் கொடுக்கும்.

இப்பயிர்களின் விதைகள் அரசு மானியத்தில் வேளாண்மை விரிவாக்க மையங்களில் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. இதனுடன் சாகுபடிக்கு தேவையான உயிர் உரங்கள், நுண்ணூட்டக் கலவை, உயிரின பூச்சி பூஞ்சானக் கொல்லி மருந்துகள், களைக்கொல்லி மருந்துகள், ஜிப்சம் போன்ற இடுப்பொருள்களும் மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. மேலும் காஞ்சிபுரம் பஞ்சுப்பேட்டையில் உள்ள வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகத்தில் உள்ள உழவர் பயிற்சி நிலையத்தில் தொடர்பு கொள்ளலாம். மேலும் 044-27223043 என்ற தொலைபேசி எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம் என்று தெரிவித்தார்.

**16-இல் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்**

நீலகிரி மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம், உதகையில் இம்மாதம் 16ஆம் தேதி நடத்தப்படுகிறது.

இதுதொடர்பாக மாவட்ட தோட்டக்கலைத் துறை இணை இயக்குநர்(பொ) என்.மணி தெரிவித்துள்ளதாவது: நீலகிரி மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம், இம்மாதம் 16ஆம் தேதி காலை 10.30 மணிக்கு உதகையில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆட்சியர் தலைமையில் நடைபெற உள்ளது.

மாவட்ட விவசாயிகள், விவசாயம் தொடர்பான குறைகள் இருப்பின் தோட்டக்கலைத் துறை இணை இயக்குநர், தபால் பெட்டி எண் 72, உதகை-1 என்ற அலுவலக முகவரிக்கு தபாலிலோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்கலாம் என அவர் தெரிவித்துள்ளார்.

**கால்நடை ஆராய்ச்சி மையத்தில் பசுந்தீவன வளர்ப்பு கருத்தரங்கம்**

திருவண்ணாமலையில் உள்ள கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் பசுந்தீவன வளர்ப்பில் நவீன தொழில்நுட்பங்கள் என்ற தலைப்பில் கருத்தரங்கம் சனிக்கிழமை  நடைபெற்றது.

ஆராய்ச்சி மைய இணைப் பேராசிரியர் மற்றும் தலைவர் சு.ராமகிருஷ்ணன், உதவிப் பேராசிரியர் ரா.ராஜ்குமார் ஆகியோர் கால்நடை வளர்ப்பில் தீவனப் பயிர்களின் முக்கியத்துவம், தீவனப் பயிர்களின் வகைகள், ரகம், விதையளவு, இடைவெளி, தீவனப் பயிருக்கு போட வேண்டிய அடியுரம், மேலுரம், தீவனப் பயிர்களின் அறுவடை நாள்கள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கினர்.

இப் பயிற்சியில் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து 56 பயனாளிகள் கலந்து கொண்டனர். விவசாயிகளுக்குத் தேவையான தீவனப் பயிர்கள், விதைகள், தாது உப்புகள், கால்நடை வளர்ப்பு பற்றிய புத்தகங்கள், குறுந்தகடுகள் வழங்கப்பட்டன.

**நிரம்பியது மேட்டூர் அணைமேட்டூர்/**

மேட்டூர் அணை இரண்டு ஆண்டுகள், எட்டு மாதங்களுக்குப் பிறகு மீண்டும் நிரம்பியது. ஞாயிற்றுக்கிழமை இரவு 9 மணி அளவில் மேட்டூர் அணை அதன்

முழுக் கொள்ளளவான 120 அடியை எட்டியது. அணைக்கு நொடிக்கு 1,40,000 கன அடி நீர் வந்து கொண்டிருக்கிறது. அந்த நீர் அப்படியே வெளியேற்றப்படுகிறது.

இதற்கு முன்னர், கடந்த 2010ஆம் ஆண்டு, டிசம்பர் 2ஆம் தேதி மேட்டூர் அணை நிரம்பியது.

அணையில் இருந்து உபரி நீர் வெளியேற்றப்படுவதால் காவிரியில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

கர்நாடக மாநிலத்தில் பலத்த மழை பெய்து வருவதால் அங்குள்ள அணைகளிலிருந்து உபரி நீர் வெளியேற்றப்படுகிறது. இதனால், மேட்டூர் அணை நிரம்பியது.

ஞாயிற்றுக்கிழமை காலை மேட்டூர் அணையின் நீர்மட்டம் 117.70 அடியாக இருந்தது. அணைக்கு வரும் நீரின் அளவு 1,15,618 கன அடியாக இருந்தது. இதனால், அணையின் பாதுகாப்புக் கருதி, மேட்டூர் அணையின் உபரி நீர்ப் போக்கியில் காலை 8 மணிக்கு நொடிக்கு 10 ஆயிரம் கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டு வந்தது. இது காலை 10 மணிக்கு 20 ஆயிரம் கன அடியாகவும், நண்பகல் 12 மணிக்கு 30 ஆயிரம் கன அடியாகவும் அதிகரிக்கப்பட்டது. மேல்மட்ட மதகுகள், நீர் மின் நிலையங்கள் வழியாக நொடிக்கு 40 ஆயிரம் கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டது.

மேட்டூர் அணையின் வலது கரையில் உள்ள உபரி நீர்ப் போக்கி மதகுகளை உயர்த்திய போது சிறப்புப் பூஜை நடைபெற்றது. 16 மதகுகளிலும் அபாய எச்சரிக்கை சங்கு ஒலிக்கப்பட்டது. அதன்பிறகு பொதுப் பணித் துறையின் முதன்மைத் தலைமைப் பொறியாளர் அசோகன், கண்காணிப்புப் பொறியாளர் குமரேசன் மற்றும் பொதுப் பணித் துறை அதிகாரிகள் மதகுகளை உயர்த்தி, உபரி நீரை வெளியேற்றினர். உபரி நீரை வெளியேற்றும் தகவல் அறிந்த சுற்றுவட்டார மக்கள் அதிக அளவில் வந்து 16 கண் பாலத்தில் குவிந்தனர். தண்ணீர்

திறந்துவிட்டதும் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். கடந்த ஜூன் மாதத்தில் வறண்டு கிடந்த மேட்டூர் அணை, தற்போது கடல் போலக் காட்சியளிக்கிறது.

ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு மேட்டூர் அணையின் நீர்மட்டம் 118.70 அடியாக உயர்ந்தது. அப்போது அணைக்கு நொடிக்கு 1,35,000 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. நொடிக்கு 70 ஆயிரம் கன அடி வீதம் தண்ணீர் வெளியேற்றப்பட்டது. நீர் இருப்பு 91.41 டி.எம்.சியாக இருந்தது.

அணைப் பூங்கா அருகில் இருந்த அணைப் பிரிவு அலுவலகம், மேட்டூர் அணையின் வலது கரையில் உபரி நீர்ப் போக்கி அருகில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. 24 மணி நேரமும் உதவிச் செயற்பொறியாளர் கோவலன் தலைமையில் தலா 10 பொதுப் பணித் துறை பணியாளர்கள் தயார் நிலையில் நிறுத்தப்பட்டுள்ளனர்.

பொதுப் பணித் துறையின் முதன்மைத் தலைமைப் பொறியாளர் அசோகன் செய்தியாளர்களிடம் கூறியது:

வெள்ளச் சேதத்தைக் கட்டுப்படுத்தவே மேட்டூர் அணையில் இருந்து முன்கூட்டியே உபரி நீர் திறக்கப்படுகிறது. இந்த உபரி நீர் மூலம் தமிழகத்தில் உள்ள 594 ஏரிகளில் தண்ணீரைத் தேக்க முடியும். இதனால், நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்து, குடிநீர்ப் பற்றாக்குறை தீரும்.

வீராணம் ஏரியும் நிரப்பப்பட்டு, சென்னை குடிநீருக்குப் பயன்படுத்தப்படும் என்றார் அவர்.

**சொட்டு நீ0ர்ப் பாசனம்: சிறு,குறு விவசாயிகளுக்கு 100% மானியம்**

சொட்டு நீர்ப்பாசனம் அமைக்க சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சத மானியம் வழங்கப்படுகிறது என்றார் தாந்தோனி வட்டாரத் தோட்டக்கலை உதவி இயக்குநர் லூ. சொர்ணமாணிக்கம்.

தேசிய நுண்ணீர்ப்பாசன இயக்கத் திட்டத்தின் கீழ் பொரணி கிராமத்தில் அண்மையில் நடைபெற்ற நுண்ணீர்ப்பாசன விழிப்புணர்வு முனைப்பு முகாமில் அவர் மேலும் பேசியது:

சிறு,குறு விவசாயிகள் 5 ஏக்கர் வரை சொட்டுநீர்ப்பாசனம் அமைக்க 100 சத மானியம் வழங்கப்படுகிறது. இதர பெரிய விவசாயிகள் 12.5 ஏக்கர் வரை சொட்டுநீ0ர்ப்பாசனம் அமைக்க 75 சத மானியம் மத்திய, மாநில அரசுகளின் நிதியுதவியுடன் வழங்கப்படுகிறது.

சொட்டு நீர்ப்பாசன முறையில் நீர் பயன்படுதிறன் அதிகரிப்பதால் அதிகப் பரப்பில் பாசனம் செய்யலாம். மேலும் பயிருக்குத் தேவையான அளவு பாசன நீர், உரங்கள் அளிப்பதால் பயிர் விளைச்சலும் அதிகரிக்கிறது.

பயிர்களுக்கு அளிக்கப்படும் உரம், பாசன நீர் தேவையான அளவில் தேவையான நேரத்தில் கிடைப்பதால் தரமான விளை பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இதன் மூலம் விவசாயிகளுக்கு வருமானமும் அதிகரிக்கிறது என்றார் அவர்.

முகாமில் ஏராளமான விவசாயிகள் பங்கேற்றனர். ஏற்பாடுகளை தாந்தோனி வட்டார உதவி வேளாண் அலுவலர்கள் கு. கல்யாணசுந்தரம், இரா. பாலசுப்பிரமணியன், கா. லெனின் உள்ளிட்டோர் செய்தனர்.

**"உரங்களை அதிக விலைக்கு விற்றால் உரிமம் ரத்து'**

தனியார் உர விற்பனை நிலையங்கள் அதிக விலைக்கு உரங்கள் விற்பனை செய்தால் உரக் கடையின் உரிமம் ரத்து செய்யப்படும் என தஞ்சாவூர் மாவட்ட வேளாண் துறை இணை இயக்குநர் ஜெ. சேகர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்திருப்பது: தனியார் உர விற்பனை நிலையங்களில் விவசாயிகள் உரம் வாங்கும்போது உரிய ரசீது கேட்டு வாங்க வேண்டும். அவ்வாறு வாங்கும்போது ரசீதில் உரத்தின் பெயர், அளவு, விலை

விவரங்கள் அடங்கியிருக்க வேண்டும். மேலும், ரசீதில் விவசாயிகள் கையொப்பம் இட்டுத்தான் வாங்க வேண்டும். இதேபோல, உர விற்பனையாளர்கள் மிகுந்த விழிப்புடனும், கவனத்துடனும் செயல்பட வேண்டும். மொத்தமாக உரம் விற்பனை செய்பவராக இருந்தால் உரம் உற்பத்தி செய்யும் நிறுவனங்களிடமிருந்து உரம் வாங்கப்பட்டு விற்பனை செய்ய வேண்டும். மேலும், விவசாயிகளுக்கு உரம் விற்பனை செய்யும்போது உரிய ரசீது வழங்கப்பட வேண்டும். உர மூட்டைகள் சரியான எடை கொண்டவையாக இருக்க வேண்டும். விலைப் பட்டியல் விவசாயிகள் பார்வையில்படும்படி வைக்க வேண்டும். இருப்பு விவரம் குறிக்கப்பட்டிருக்க வேண்டும். மேலும், அதிகபட்ச விற்பனை விலைக்கும் அதிகமாக விற்பனை மேற்கொள்வது தெரிய வந்தால் சம்பந்தப்பட்ட உரக் கடைகளின் உரிமம் ரத்து செய்யப்படும்.

**மேட்டூர் அணையின் நீர்மட்டம் ஞாயிற்றுக்கிழமை மாலை 119.02 அடியாக இருந்தது**

மேட்டூர் அணையின் நீர்மட்டம் ஞாயிற்றுக்கிழமை மாலை 119.02 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 1,22,601 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 53,797 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையிலிருந்து காவிரி, வெண்ணாற்றில் வினாடிக்கு தலா 4,501 கன அடி வீதமும், கல்லணைக் கால்வாயில் 3,004 கன அடி வீதமும், கொள்ளிடத்தில் 2,000 கன அடி வீதமும் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.

**கல்லணை திறப்பு: 13 லட்சம் ஏக்கர் பாசன வசதி பெறும்**

கல்லணை திறக்கப்பட்டதன் மூலம் 5 மாவட்டங்களிலுள்ள 12.97 லட்சம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்றார் தமிழக பொதுப்பணித் துறை அமைச்சர் கே.வி. ராமலிங்கம்.

டெல்டா மாவட்ட பாசனத்துக்காக ஆக. 2-ம் தேதி திறக்கப்பட்ட மேட்டூர் அணை தண்ணீர் ஞாயிற்றுக்கிழமை காலை கல்லணை வந்தது.

இதைத்தொடர்ந்து, கல்லணையிலிருந்து அமைச்சர்கள் கே.வி. ராமலிங்கம் (பொதுப் பணித் துறை), ஆர். வைத்திலிங்கம் (வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை), ஆர். காமராஜ் (உணவுத் துறை), கே.ஏ. ஜெயபால் (மீன்வளத் துறை), டி.பி. பூனாட்சி (கதர், கிராமத் தொழில் துறை), சுப்பிரமணியன் (ஆதிதிராவிடர் நலத் துறை) ஆகியோர் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் தண்ணீர் திறந்துவிட்டனர். இதில், கல்லணையிலிருந்து முதலில் காவிரியிலும், தொடர்ந்து வெண்ணாறு, கல்லணைக் கால்வாய், கொள்ளிடத்திலும் தண்ணீர் திறக்கப்பட்டது.

பின்னர், அமைச்சர் கே.வி. ராமலிங்கம் தெரிவித்தது:

கல்லணையிலிருந்து ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி முதல் காவிரியில் வினாடிக்கு 4,500 கன அடி வீதமும், வெண்ணாற்றில் வினாடிக்கு 4,500 கன அடி வீதமும், கல்லணைக் கால்வாயில் வினாடிக்கு 3,000 கன அடி வீதமும், கொள்ளிடத்தில் வினாடிக்கு 2,000 கன அடி வீதமும் நீர் பங்கீடு செய்யப்படுகிறது.

காவிரி பாசனப் பகுதி ஆறுகளில் தண்ணீர் கடைமடைக்குச் சென்ற பிறகு காரைக்கால் பாசனப் பகுதிக்கு உரிய நீர் பங்கீடு அளிக்கப்படும்.

இந்தத் தண்ணீர் மூலம் நிகழாண்டு சம்பா பருவத்தில் தஞ்சாவூர் மாவட்டத்தில் 4.50 லட்சம் ஏக்கர், திருவாரூர் மாவட்டத்தில் 3.90 லட்சம் ஏக்கர், நாகை மாவட்டத்தில் 3.30 லட்சம் ஏக்கர், புதுக்கோட்டை மாவட்டத்தில் 27 ஆயிரம் ஏக்கரும், கடலூர் மாவட்டத்தில் ஒரு லட்சம் ஏக்கரும் பாசன வசதி பெறும். விவசாயிகள் தண்ணீரை சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும் என்றார் அவர்.

மாநிலங்களவை உறுப்பினர் ரெத்தினவேல், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத் தலைவர் கு. தங்கமுத்து, சட்டப்பேரவை கொறடா ஆர். மனோகரன்,

சட்டப்பேரவை உறுப்பினர்கள் எம். ரெங்கசாமி (தஞ்சாவூர்), எம். ரெத்தினசாமி (திருவையாறு), இரா. துரைக்கண்ணு (பாபநாசம்), ஆர். சந்திரசேகரன் (மணப்பாறை), த. இந்திராகாந்தி (துறையூர்), எஸ். பவுன்ராஜ் (பூம்புகார்), என்.வி. காமராஜ் (வேதராண்யம்), ம. சக்தி (சீர்காழி), கே. உலகநாதன் (திருத்துறைப்பூண்டி), மாவட்ட ஆட்சியர்கள் கா. பாஸ்கரன் (தஞ்சாவூர்), எஸ். நடராஜன் (திருவாரூர்), து. முனுசாமி (நாகப்பட்டினம்), பொதுப் பணித் துறைத் திருச்சி மண்டலத் தலைமைப் பொறியாளர் பைந்தமிழ்ச்செல்வன் உள்ளிட்டோர் விழாவில் கலந்து கொண்டனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**05.08.2013**

## தமிழகத்தில் அரிசி விலை குறைகிறதுகர்நாடகாவிலிருந்து வரத்து அதிகரிப்பு

திண்டுக்கல்:கர்நாடகாவிலிருந்து, பொன்னி ரக அரிசி மூட்டைகள், அதிகளவில் தமிழகத்திற்கு வருவதால், மூட்டைக்கு, 300 ரூபாய் வரை குறைந்துள்ளது. கர்நாடகாவிலிருந்து, பொன்னி ரக அரிசி, தமிழகத்திற்கு அதிகளவு வரவழைக்கப் படுகிறது.

**பதுக்கல்:**கர்நாடகாவில், கடந்தசில மாதங்களுக்கு முன், மழைபெய்யாததால், இரண்டாவது போகம், நெல்விளைச்சல் பாதிக்கப்பட்டு, அரிசி விலைஉயரும் என, வியாபாரிகள் எதிர்பார்த்தனர். இதனால், நெல் மூட்டைகளை வாங்கி அரவைக்கு, ஆலைகளுக்கு அனுப்பாமல், இருப்பு வைத்தனர்.இதன் காரணமாக, அரிசி விலை அதிகரித்து, தேவையான அளவிற்கு மூட்டைகளை வாங்க முடியாமல், தமிழக மொத்த வியாபாரிகள் தவித்தனர். தமிழகத்தில் பொன்னி ரக அரிசி விலை, கிலோ, 55லிருந்து, 60 ரூபாய் வரை விற்கப்பட்டது.

தற்போது, கர்நாடகாவில் பெய்துவரும் பலத்த மழை காரணமாக, அனைத்து அணைகளும் நிரம்பி வழிவதால், இரண்டாவதுபோக சாகுபடிக்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இதனால், லாபத்தை எதிர்பார்த்து, நெல் மூட்டைகளை பதுக்கிய கர்நாடக வியாபாரிகள், தற்போது அரவை ஆலைகளுக்கு அனுப்ப துவங்கி உள்ளனர். இதனால், தமிழகத்திற்கு தேவையான கர்நாடக பொன்னி அரிசி அதிக அளவில் வரத் துவங்கியுள்ளது.

**மந்த நிலை:**திண்டுக்கல் அரிசி மொத்த விற்பனையாளர் ஒருவர் கூறுகையில்,

"பொன்னி ரக அரிசியின் விலை, கிலோ, மூன்று ரூபாயும், மூட்டைக்கு, 300 ரூபாயும் குறைந்துள்ளது. மேலும், விலை குறைய வாய்ப்புள்ளதால், மொத்தமாக அரிசி மூட்டைகளை வாங்குவோர் காத்திருக்க துவங்கியுள்ளனர். இதனால், விற்பனையில் மந்தநிலை ஏற்பட்டுள்ளது' என்றார்.

### சர்க்கரை விலை உயரும் "இக்ரா' மதிப்பீடு

புதுடில்லி:வரும் மாதங்களில்,சர்க்கரை விலை, டன்னுக்கு, 1,000 ரூபாய்அதிகரிக்கும் என, மதிப்பிடப்பட்டு உள்ளது. கரும்பு வரத்து குறைந்து, அரவைக் காலம் முடிவுக்கு வருவதால்,சர்க்கரை அளிப்பு குறைந்து, அதன் விலை உயரும் என, தரக் குறியீட்டு நிறுவனமான "இக்ரா' தெரிவித்துள்ளது.
இருப்பினும், கடந்த மாதம் வரை,சர்க்கரையின் ஆலை விலை, டன்னுக்கு, 31 ஆயிரம் ரூபாய்என்ற அளவில், மாற்ற மின்றி காணப்பட்டது.நடப்பு 2012 - 13ம் பருவத்தில் (அக்.,-செப்.,), நாட்டின்சர்க்கரை உற்பத்தி (இறக்குமதி உட் பட), பயன்பாட்டை விட,சற்று அதிகமாக இருக்கும் என, மதிப்பிடப்பட்டுள்ளது.
குறிப்பாக, நடப்பு பருவத் தில்,சர்க்கரையின் ஒட்டு மொத்த பயன்பாடு, 2.3 - 2.5 கோடி டன் என்ற அளவில் இருக்கும் என, கணக்கிடப்பட்டுள்ளது.

### தேயிலை தூள் ஏல விற்பனையில் மந்தம்

குன்னூர்:தேயிலை தூள் கொள்முதலில், வர்த்தகர்கள் ஆர்வம் காட்டாததால் குன்னூர் ஏல மையங்களில், அதன் விற்பனை சரிந்து வருகிறது; இதனால் 50 சதவீத தேயிலை தூள் தேக்கமடைந்து உள்ளது.
குன்னூர் அரசு தேயிலை ஏல மையத்தில், 31வது ஏலம் நடந்தது. இதில், மொத்தம் 5 லட்சத்து 35 ஆயிரத்து 930 கிலோ தேயிலை விற்பனைக்கு வந்தது. இதில், 2 லட்சத்து 61 ஆயிரத்து 979 கிலோ இலை ரகமும், 2 லட்சத்து 73 ஆயிரத்து 951 கிலோ டஸ்ட் ரகமும் அடங்கும். மொத்தமுள்ள 5.35 லட்சம் கிலோவில் 50 சதவீதம் மட்டுமே விற்பனையானது. அனைத்து ரகங்களிலும் 2 ரூபாய் வரை சரிவு

ஏற்பட்டது. சென்ற வார நிலவரப்படி இலை ரகத்தில்,சாதாரணரகம்70முதல்75 ரூபாய் வரையிலும், உயர்ரகம்75முதல்110 ரூபாய் வரையிலும், டஸ்ட் ரகத்தில் சாதாரணரகம்80முதல்85 ரூபாய் வரையிலும், உயர்ரகம் 95 முதல் 103 ரூபாய் வரையிலும் விலை கிடைத்தது.

குன்னூரில் ஏல மையங்களில் கடந்த சில வாரங்களாக சுமார் 30 சதவீத தேயிலை தூள் தேக்கமடைந்து வருகிறது. இது, தற்போது, 50 சதவீதமாக உயர்ந்துள்ளது. தேயிலையின் தரம் குறைந்துள்ளதால் வெளிநாட்டு வர்த்தகர்கள் தேயிலையை கொள்முதல் செய்வதில் ஆர்வம் காட்டவில்லை. இதனால் தேயிலை தூள் தேக்கமடைந்து வருகிறது.

இந்நிலையில், குன்னூர் மற்றும் கோத்தகிரி சுற்று வட்டாரப்பகுதிகளில் ஒரு சில இடங்களில் சாரல் மழை பெய்து வருவதால், தேயிலை வரத்து குறைய துவங்கியுள்ளது. இதனால் தொழிற்சாலைகளில் பசுந்தேயிலை விலை, கிலோவுக்கு 50 பைசா வரை குறைந்துள்ளது. ஒரு கிலோ, சாதாரண ரக பசுந்தேயிலைக்கு 16 ரூபாயும், நடுத்தர தேயிலைக்கு, 19 ரூபாயும், உயர் ரகத்துக்கு, 22 ரூபாய்என்ற அளவிலும், விலை கிடைத்துள்ளது.

## கரும்பு நடவு முறைக்கு மானியம்: வேளாண் துறை

தர்மபுரி: "தர்மபுரி மாவட்டத்தில் கரும்பு நடவு முறைக்கு மானியம் வழங்கப்படுகிறது' என வேளாண் இணை இயக்குனர் மனோகரன் தெரிவித்தார். இது குறித்து அவர் கூறியதாவது:

தர்மபுரி மாவட்டத்தில், பாலக்கோடு, பென்னாகரம், அரூர், பாப்பிரெட்டிப்பட்டி உட்பட மாவட்டம் முழுவதும், 17,000 ஹெக்டேர் கரும்பு சாகுபடி செய்யப்படுகிறது. இதில்,10,000 ஹெக்டேர் நேரடி நடவிலும், 7,000 ஹெக்டேர் மறுதாம்பு முறையிலும் சாகுபடி செய்யப்படுகிறது.

மாவட்டத்தில் கடந்த சில ஆண்டுகளாக எதிர்பார்த்த பருவமழையில்லாதது

உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் கரும்பு உற்பத்தி குறைந்து வருகிறது. கரும்பு உற்பத்தியை அதிகரிக்க அரசு வேளாண் துறை சார்பாக கடந்த, இரு ஆண்டுகளாக கரும்பு கருணை நடவு முறைக்கு பதிலாக, கரும்பு விதைப்பருப்பு சீவல்கள் மூலம் குழி தட்டுகளில் நாற்றுகள் தயாரித்து நடவு செய்யும் முறையை விவசாயிகளுக்கு அறிமுக படுத்தி வருகிறோம். கரும்பு நாற்றுக்கள் கிடைக்கும் துல்லிய பண்ணைகள் குறித்த விபரங்களையும் விவசாயிகளுக்கு வழங்குகிறோம்.

ஒரு ஏக்கர் கரும்பு நடவு செய்ய, நான்கு டன் எடை கொண்ட, 30,000 விதைப்பரு கருணை தேவைப்படுகிறது. ஆனால், நாற்றுக்கள் மூலம் நடவு செய்ய, 50 கிலோ கொண்ட, 5,000 விதை பருக்கள் மட்டும் போதுமானது.

நாற்றுக்கள் நடவு முறைக்கு குறைந்த அளவு தண்ணீர் போதுமானது. மேலும், கருணை பயிரில் கிளைவிடும் முளைகளின் எண்ணிக்கையை விட, நாற்றுக்கள் நடவு பயிர்களில், இரு மடங்கு கிளைவிடும் முளைகளின் எண்ணிக்கை இருக்கும். இதன் மூலம் விவசாயிகளுக்கு அதிகபட்சமாக, ஏக்கருக்கு, 150 டன் வரை மகசூல் கிடைக்கும். இதனால், நாட்டில் சர்க்கரை உற்பத்தியும் அதிகரிக்கும். நாற்று நடவு கரும்பு சாகுபடிக்கு அரசு, ஒரு ஹெக்டேருக்கு, 30,000 ரூபாய் மானியம் வழங்கி வருகிறது. மேலும் தேசிய நுண்ணுயிர் பாசன திட்டத்தின் கீழ் இலவசமாக சொட்டு நீர் பாசனம் அமைத்து தரப்படுகிறது.

தர்மபுரி மாவட்டத்தில் நடப்பாண்டில், 1, 200 ஹெக்டேர் கரும்பு நாற்று நடவுக்கு மானியம் வழங்க நிர்ணயம் செய்துள்ளது. நாற்று முறையில் கரும்பு சாகுபடி செய்து மானியம் பெற விரும்பம் உள்ள விவசாயிகள் தர்மபுரி, நல்லம்பள்ளி, பென்னாகரம், பாலக்கோடு, காரிமங்கலம், மொரப்பூர், அரூர், பாப்பிரெட்டிபட்டி ஆகிய பகுதிகளில் உள்ள உதவி தொடக்க வேளாண் அலுவலரிடம் நேரடியாக விண்ணப்பத்தை வழங்க வேண்டும்.

இவ்வாறு கூறினார்.

### விவசாயிகளுக்கான கிராம அடிப்படை பயிற்சி முகாம்

ராசிபுரம்: நாமக்கல் உழவர் பயற்சி நிலையம் சார்பில், விவசாயிகளுக்கான கிராம அடிப்படை பயிற்சி முகாம், நாமகிரிப்பேட்டை யூனியன் கரியாம்பட்டியில், இரண்டு நாட்கள் நடந்தது.

வேளாண் உதவி இயக்குனர் கிருஷ்ணவேணி தலைமை வகித்தார். அதில், குறைவான நீரில் செயல்படுத்தபடும் சொட்டுநீர், தெளிப்பு நீர் பாசனத்தில் சாகுபடி செய்யும் முறைகள் குறித்து விளக்கப்பட்டது. மேலும், ஒவ்வொரு பயிர்களுக்கும் தகுந்த உர பரிந்துரையின் அடிப்படையில், மண்ணின் தன்மைக்கு ஏற்றவாறு சாகுபடி செய்து கூடுதல் மகசூல் பெறும் வழிமுறைகள் பற்றியும் எடுத்துரைக்கப்பட்டது.

தற்போது, வறட்சி அதிகம் காணப்படுவதால், ஆங்காங்கே குளம், குட்டை, ஏரி ஆகியவற்றை ஆழப்படுத்தி, பெய்யும் மழையை கொண்டு, தண்ணீரை சேகரித்து சாகுபடி செய்வதின் அவசியம் குறித்தும், கறவை மாடுகளுக்கு சுத்தமாக பால் கறக்கும் முறைகள் பற்றியும் விளக்கப்பட்டது.

அசோலா கலப்பின தீவனமாக மாடுகளுக்கு வழங்குவது பற்றி செயல் விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது. தோட்டக்கலை பயிர்கள் குறித்து, சித்திரை செல்வியும், பயிர் சாகுபடி குறித்து வேளாண் துணை இயக்குனர் நடராஜனும் விளக்கினர். துணை வேளாண்அலுவலர் மாதேஸ்வரன், அட்மா திட்ட அலுவலர்கள், விவசாயிகள் பங்கேற்றனர்.

### டெல்டா பாசன பகுதியில் குறுவை சிறப்பு தொகுப்பு திட்டம்: கலெக்டர்

அரியலூர்: டெல்டா பாசன பகுதியில் குறுவை சிறப்பு தொகுப்பு திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இதுகுறித்து அரியலூர் கலெக்டர் ரவிக்குமார் வெளியிட்ட அறிக்கை:

அரியலூர் மாவட்ட டெல்டா பாசனப்பகுதியில், குறுவை சாகுபடி செய்யும்

விவசாயிகள் பயன்பெறும் வகையில், குறுவை சிறப்பு தொகுப்பு திட்டம், 2013-2014 செயல்படுத்த தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் குறுவை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு, உயிர் உரங்களான அசோஸ்பைரில்லம் ஏக்கருக்கு, நான்கு பாக்கெட் மற்றும் பாஸ்போ பாக்டீரியா ஏக்கருக்கு, நான்கு பாக்கெட், ஜிப்ஸம் ஏக்கருக்கு, 200 கிலோ, நெல் நுண்ணுட்ட கலவை ஏக்கருக்கு, 5 கிலோ, பூச்சிகளை கட்டுப்படுத்தும் உயிரியல் பூச்சி கொல்லி (அசாடிராக்டின்) ஏக்கருக்கு, ஒரு லிட்டர் ஆகிய இடுபொருட்கள் மற்றும் பாசன நீரை தண்ணீர் எடுத்து செல்லும் ஹெச்.டி.பி.இ., குழாய்கள் இலவசமாக வழங்கப்படவுள்ளது.

பாசன நீர் ஆவியாதல் மற்றும் பல்வேறு வழிகளில் வீணாகும் நீரை தடுப்பதற்காகவும், வயல்களுக்கு நேரடியாக தண்ணீர் எடுத்து செல்லும் குழாய்கள் இலவசமாக வேளாண் பொறியியல்துறை மூலம் வழங்கப்படவுள்ளது. குழாய் கிணறு வைத்து குறுவை சாகுபடி செய்யும் விவசாயிகள், இதை பெற தகுதியுடையவர்கள் ஆவர்.

எனவே நமது மாவட்டத்தைச் சேர்ந்த டெல்டா பாசன பகுதியில், குறுவை சாகுபடி செய்யும் விவசாயிகள், குறுவை சிறப்பு தொகுப்பு திட்டத்தின்கீழ் பயன் பெற, தங்கள் பகுதியிலுள்ள வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

மேலும் குறுவை சாகுபடி செய்யும் விவசாயிகள், தங்கள் பகுதி வேளாண்மை உதவி அலுவலரையோ அல்லது தங்கள் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகத்தையோ தொடர்பு கொண்டு, இடுபொருட்கள் பெற்று பயன் பெறுமாறு கேட்டு கொள்ளப்படுகிறார்கள்.

### மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு பேரணி

சென்னிமலை டவுன் பஞ்சாயத்து பகுதிகளில் மழை நீர் சேகரிப்பு திட்டத்தை முழுமையாக செயல்படுத்திடும் வகையில், மழைநீர் சேகரிப்பின் அவசியத்தை விளக்கும் வகையில், பச்சை நிற சீருடை மற்றும் தொப்பி அணிந்து விழிப்புணர்வு பேரணி நடந்தது.

சென்னிமலை டவுன் பஞ்சாயத்து அலுவலகத்தில் துவங்கிய பேரணி, நான்கு ராஜவீதிகள் மற்றும் பார்க் ரோடு, சந்தைப்பேட்டை வழியாக வந்து மீண்டும் அலுவலகத்தை வந்தடைந்தது.

பேரணியுடன், பொதுமக்களுக்கு துண்டு பிரசுரங்கள் வினியோகிக்கப்பட்டது. டவுன் பஞ்சாயத்து தலைவர் ஜம்பு என்ற சண்முகசுந்தரம், செயல் அலுவலர் தன்னாசி, துணைத்தலைவர் தெய்வசிகாமணி உட்பட பலர் பங்கேற்றனர். ஏற்பாடுகளை சுகாதார மேற்பார்வையாளர் அக்கீம் சேட் செய்திருந்தார்.

### பாபநாசம் அணைநீர்மட்டம் உயர்வு

விக்கிரமசிங்கபுரம்:பாபநாசம் அணையின் நீர்மட்டம் நேற்று 126.75 அடியாக இருந்தது.நேற்று காலை நிலவரப்படி பாபநாசம் அணைக்கு விநாடிக்கு 846.50 கனஅடிநீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து 1500 கனஅடிநீர் வெளியேறியது. நேற்று சேர்வலார் அணையின் நீர்மட்டம் 128.44 அடியாகவும், மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் 65.68 அடியாகவும் இருந்தது.

### வறட்சியால் நெல் நடவுப் பணிகளில் விவசாயிகள்.

மழை இல்லாததால் பாதாளத்திற்கு சென்ற கிணற்று நீர் வத்திராயிருப்பு:கோடை விவசாயத்தில் பெரும் நஷ்டத்தை சந்தித்த நெல் விவசாயிகள், தற்போது நிலவும் கடும் வறட்சியாலும், மழை அறிகுறி இல்லாததாலும், காலநடவுப் பணிகளில் ஈடுபட தயக்கம் காட்டி வருகின்றனர்.மாவட்டத்தின் மேற்குப்பகுதிகளான, பிளவக்கல், வத்திராயிருப்பு,

ஸ்ரீவி., ராஜபாளையம், சேத்தூர், தேவதானம் வரை, அதிகளவில் நெல் விவசாயம் நடந்து வருகிறது. இங்குள்ள நஞ்சை நிலங்களில், 25 ஆயிரம் ஏக்கர்களுக்கு மேல் நடந்து வந்த நெல் விவசாயம், கடந்த கோடை நடவின் போது, போதிய மழை, கண்மாய்களில் நீர் இல்லாததால், 60 சதவீதத்திற்கும் குறைவாகவே நடந்தது. மிகக்குறைந்த எண்ணிக்கையில், கண்மாய் பாசன விவசாயிகளும், கிணற்றுப்பாசன விவசாயிகளும் மட்டுமே நடவுப்பணிகளை மேற்கொண்டனர். கடும் மின்தடை காரணமாக, பம்புசெட்டுகளை இயக்க முடியாமல், வயலுக்கு நீர்பாய்ச்ச முடியாமல், இருதரப்பு விவசாயிகளுக்கு மகசூல் இழப்பு நேரிட்டது. ஒவ்வொரு விவசாயிக்கும், ஏக்கருக்கு 15 ஆயிரம் ரூபாய் வரை இழப்பு ஏற்பட்டது. இதனால், மாவட்டத்தில் பெரும்பாலான விவசாயிகள், கடனுக்கு ஆளாகினர். வங்கி கடனுக்கு கூட வட்டி கட்ட முடியாத நிலையில் உள்ளனர். இந்நிலையில், அடுத்த காலமுறை விவசாயத்திற்கு நாள் துவங்கி விட்டது. "ஆடிப்பட்டம் தேடி விதை' என்ற பழமொழிக்கேற்ப, ஒவ்வொரு ஆண்டும் விவசாயிகள் ஆடிமாத துவக்கத்தில் இருந்தே நடவுப்பணிகளை துவக்கி விடுவர். ஆனால் இம்முறை, நடவுப்பணிகளை துவக்க யாரும் முன்வரவில்லை. சேத்தூர், தேவதானம், வத்திராயிருப்பு பிளவக்கல் அணை பகுதியில், விரல்விட்டு எண்ணக்கூடிய ஒருசில கிணற்றுப்பாசன விவசாயிகள் மட்டுமே, சாஸ்திர, சம்பிரதாயம் கருதி, நடவுப்பணிகளை துவக்கினர். ஆனால், 90 சதவீத விவசாயிகளுக்கு மேல் யாரும் நடவுப்பணிகளில் ஆர்வம் காட்டவில்லை. மாவட்டத்தில் மிகப்பெரிய நீர்தேக்கமாக விளங்கும் பிளவக்கல் பெரியாறு, கோவிலாறு அணைகள், இருக்கன்குடி அணை, கோல்வார்பட்டிஅணை, சாஸ்தாகோவில்அணை, உட்பட எந்த அணைகள், கண்மாய்களில் சொட்டுநீர்கூட இல்லாததே காரணமாகும். மேலும், இன்றுவரை மழைக்கான அறிகுறியும் இல்லை. இதன் காரணமாகவே ,விவசாயிகள் இம்முறை நடவுப்பணிகளில் ஈடுபட தயக்கம் காட்டுகின்றனர். ராமச்சந்திரன் (வத்திராயிருப்பு): கடந்த கோடையில், கண்மாயில் சிறிது நீர்

இருந்தது. அந்த நம்பிக்கையில் பயிரிட்÷டாம். ஆனால் தண்ணீர் வற்றி, கண்ணீரை வரவழைத்துவிட்டது. கிணற்றுப்பாசனத்திற்கு தண்ணீர் இருந்தும், மின் தடையால் மகசூலை இழக்க நேரிட்டது. இனி, மழைபெய்தால் மட்டுமே ,விவசாயம் செய்ய வேண்டும் என்ற முடிவில் உள்ளேன்.

காளியப்பன்(ஸ்ரீவில்லிபுத்தூர்): மழைபெய்யும் என்ற நம்பிக்கையில், விதைத்து விட்டு நஷ்டப்படத் தயாராக இல்லை. எத்தனை முறைதான் நஷ்டத்தை சந்திப்பது. விவசாயத்தையே கைவிட்டு விடலாம் என நினைக்கிறேன். லாபத்தை விட, நஷ்டமே மேலோங்கி உள்ளது.உண்ணாமலையப்பன் (ராஜபாளையம்): ஆடியில் மழைக்கான அறிகுறியே தெரியவில்லை. கிணறுகளிலும் நீர் பாதாளத்திற்கு சென்றுவிட்டது. எதை நம்பி விதைப்பது. கடந்த முறை 75 ஆயிரம் ரூபாய் மேல், எனக்கு இழப்பு ஏற்பட்டது.

மத்தியக்குழுவினர் வந்து எட்டிக்கூட பார்க்க வில்லை. ஒரு ரூபாய்கூட நிவாரண உதவி கிடைக்கவில்லை.

## தரமான விதை கிடைத்தாலும் பருத்தி சாகுபடிக்கு விவசாயிகள் தயக்கம்

தேனி:தரமான விதைகள், தாராளமாக கிடைத்தாலும், பருத்தி சாகுபடிக்கு,தேனி மாவட்ட விவசாயிகள் தயக்கம் காட்டி வருகின்றனர்.

தேனி மாவட்டத்தில், 25 ஆயிரம் ஹெக்டேருக்கும் அதிக பரப்பளவில், பருத்தி விளைந்தது. தேனி பருத்தி மார்க்கெட், மாநில அளவில் இரண்டாவது இடத்தை பிடித்தது.

அந்த அளவிற்கு தேனிக்கு பருத்தி வரத்து இருந்தது. தரமற்ற விதைகள், பூச்சி தாக்குதல், விளைச்சல் வீழ்ச்சி, விலை சரிவு, தொழிலாளர் பற்றாக்குறை போன்ற காரணங்களால் பருத்தி விவசாயிகள் பெரும் இழப்பை சந்தித்தனர். இதனால் பருத்தி சாகுபடியை கை விட்டு, மக்காச்சோளம், கரும்பு சாகுபடிக்கு மாறி விட்டனர். தற்போது பருத்தி தேவை அதிகரிப்பின் காரணமாக, விலை

அதிகரித்துள்ளது. பூச்சி தாக்குதலை தாங்கும் சக்தியுள்ள, பி.டி., காட்டன் ரக பருத்தி விதைகள் தாராளமாக கிடைக்கின்றன.

இந்த ரகத்தில் விளைச்சலும் அதிகம் கிடைக்கும். இருப்பினும் பருத்தி பயிரிட விவசாயிகள் ஆர்வம் காட்டவில்லை. விவசாயத்துறை இந்த ஆண்டில், 3 ஆயிரம் ஹெக்டேரில் பருத்தி விளைவிக்க முயற்சி மேற்கொண்டு வருகிறது. தற்போது 700 ஹெக்டேருக்கும் குறைவான நிலத்தில் மட்டும் பருத்தி சாகுபடி நடந்து வருகிறது. மக்காச்சோளம், கரும்பு சாகுபடி செய்த விவசாயிகள் மீண்டும் பருத்திக்கு மாற தயாராக இல்லை. விவசாயிகள் கூறுகையில்,""மக்காச்சோளம் ஆண்டுக்கு மூன்று முறை விவசாயம் செய்ய முடிகிறது. விலையும் கிடைக்கிறது. வேலைப்பளுவும் குறைவு. ஆனால் பருத்தி விளைவிக்க ஓராண்டிற்கு மேல் ஆகிறது. வேலைப்பளுவும் அதிகம். தற்போது தொழிலாளர் பற்றாக்குறை உள்ள நிலையில், பருத்தி சேகரித்து மார்க்கெட்டில் விற்க வாய்ப்புகள் இல்லை'' என்றனர்.

### தக்காளி வரத்து அதிகரிப்பால் விலை குறைந்தது

திண்டுக்கல்:உள்ளூர் மற்றும் பிற மாவட்டங்களில் இருந்து தக்காளி வரத்து அதிகரித்துள்ளதால், மொத்த மார்க்கெட்டில் விலை குறைந்துள்ளது. தக்காளி கடந்த வாரம் கிலோ ரூ. 80 க்கு விற்பனையானது. உள்ளூர் தக்காளி வரத்து இல்லாததால் ஆந்திராவிலிருந்து தக்காளி அதிக அளவில் கொள்முதல் செய்யப்பட்டது. போக்குவரத்து செலவு மற்றும் தேவை அதிகரிப்பு காரணமாக தக்காளி விலை அதிகரித்திருந்தது. தற்போது, பழநியிலிருந்து தக்காளி அதிக அளவில் வரத்துவங்கியுள்ளது. இது தவிர உடுமலைபேட்டையிலிருந்தும் தக்காளி அதிகளவில் திண்டுக்கல் மார்க்கெட்டிற்கு வருகிறது. இதனால் ஆந்திராவிலிருந்து கொள்முதல் செய்வதை வியாபாரிகள் நிறுத்திவைத்துள்ளனர். அதிக வரத்து காரணமாக தக்காளி நேற்று கிலோ ரூ. 10 க்கு விற்பனையானது. திண்டுக்கல் மொத்த மார்க்கெட்டில் நேற்றைய காய்கறி விலை (கிலோவில்) விபரம்: முள்ளங்கி-

ரூ. 10, உருளை கிழங்கு- ரூ.20, கேரட்- ரூ. 25, பீட்ரூட் ரூ. 20, அவரை- ரூ. 30, கோழி அவரை- ரூ. 40, முட்டைகோஸ்- ரூ. 20, முருங்கைக்காய்- ரூ. 30, கத்திரிக்காய்- ரூ. 40, புடலங்காய்- ரூ. 15, சின்ன வெங்காயம் -ரூ. 30, பல்லாரி- ரூ. 35, பீன்ஸ்- ரூ. 25, பாகற்காய்- ரூ. 25 க்கு விற்பனை செய்யப்பட்டது.

**ஆடிப் பட்டம் தேடி விதை**

ஆடி மாதத்தில் ஆறுகளில் புதுவெள்ளம் பெருக்கெடுத்து கரை புரண்டு ஓடும். இதனை ஆற்றுப் பெருக்கு என அழைப்பார்கள். பயிர் செழிக்க வளம் அருளி மக்கள் மனங்களில் மகிழ்ச்சி வெள்ளம் கரை புரண்டு ஓட செய்யும் அன்னை காவேரிக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக ஆடி மாதத்தில் 18-ஆம் நாளை ஆடிப் பெருக்கு என்று தமிழக மக்கள் கொண்டாடி மகிழ்கிறார்கள்.

தமிழ்நாட்டில் உள்ள காவேரி, பெண்ணை, பொருணை ஆகிய மூன்று நதிகளிலும் ஆடி பதினெட்டு கொண்டாடுவதை மூவாறு பதினெட்டு எனக் குறிப்பிடுவார்கள். ஆடியில் விவசாயப் பெருங்குடி மக்கள் விவசாயப் பணிகளைத் துவக்குவார்கள். ஆடிப் பட்டம் தேடி விதை என்ற பழமொழிக்கு ஏற்ப, நாடு செழிக்கவும், தனம் கொழிக்கவும் நீரைப் போற்றி பாதுகாக்க வேண்டும் என்ற உயரிய நோக்கில் நதியை தெய்வமாக போற்றி வழிபட்டனர் நம் முன்னோர். அதற்குரிய வழிபாட்டு திருநாளாக ஆடி பதினெட்டாம் நாளை தேர்ந்தெடுத்தனர். ஆடி வரும் நீரின் மிகையால் இந்த விழா இப்போதும் காவேரிக் கரை மாவட்டங்களில் விமரிசையாக கொண்டாடப்படுகிறது.

இந்தியாவில் பெரும்பாலான மாநிலங்கள் தென்மேற்கு பருவமழையினால்தான் பயனடைந்து வருகின்றன. தமிழ்நாட்டில் கடந்த ஜூன் 1-ஆம் தேதி முதல் தென்மேற்கு பருவமழை பெய்து, திருநெல்வேலி, கன்னியாகுமரி, கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் நீர் நிலைகள் நிரம்பியுள்ளன. தமிழ்நாட்டில் கடந்த ஆண்டை விட தென்மேற்கு பருவமழை இந்த ஆண்டு இதுவரை 24 சதவீதம் அதிகமாக பெய்துள்ளது. அதாவது சராசரியாக 5 செ.மீ.க்கு

பதிலாக 6 செ.மீ பெய்துள்ளது. கோயம்புத்தூர், கன்னியாகுமரி, தேனி, திருநெல்வேலி, நீலகிரி, நாமக்கல், ஈரோடு, சேலம் ஆகிய மாவட்டங்களில் சராசரியை விட மழை அதிகமாக பெய்துள்ளது.

காவேரி நீர்பிடிப்பு பகுதிகளில் தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்ததால் கர்நாடகாவின் கிருஷ்ணராஜசாகர் மற்றும் கபினி அணைகள் முழுக் கொள்ளளவை அடைந்துள்ள நிலையில், அந்த அணைகளிலிருந்து உபரி நீர் தொடர்ந்து வெளியேற்றப்பட்டு வருவதால் மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு அதிகரித்து வருகிறது. கர்நாடக அணைகளில் திறக்கப்படும் தண்ணீரால் ஓகேனக்கல் காவேரி ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது.

2011-ஆம் ஆண்டு முதன்முறையாக ஜூன் 6-ஆம் தேதியே தண்ணீர் திறந்து விடப்பட்டது. ஆனால், 2012-இல் தென்மேற்கு பருவழை தவறியதால் மேட்டூர் அணையின் நீர் இருப்பு 36.73 டி.எம்.சி.யாக குறைந்து விட்ட நிலையில் டெல்டா குறுவை சாகுபடிக்கு அணையில் இருந்து நீர் திறக்கப்படவில்லை.

காவேரி ஆற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளதால், மேட்டூர் அணையின் நீர் மட்டம் வேகமாக உயர்ந்து வருகிறது.

இந்தச் சூழ்நிலையில் காவேரி பாசனப் பகுதிகளில் வாழும் மக்கள் ஆடிப்பெருக்கு விழாவினை பெருமகிழ்ச்சியுடன் சீரோடும், சிறப்போடும் கொண்டாடும் வகையில் தமிழக அரசு 10000 கன அடி நீரினை விடுவித்துள்ளது காவேரி டெல்டா பகுதி விவசாயிகளிடை பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இது தவிர காவேரி டெல்டா பகுதி விவசாயிகளின் நலனை கருத்தில் கொண்டும், அவர்கள் சம்பா சாகுபடிக்கான பணிகளை முன் கூட்டியே மேற்கொண்டிருப்பதை கருத்தில் கொண்டும் பாசனத்திற்காக மேட்டூர் அணையிலிருந்து நீர் திறந்து விடப்பட்டிருப்பது விவசாயப் பெருங்குடி மக்களிடையே இரட்டிப்பு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. தமிழக அரசின் இந்த உத்தரவால் 11 டெல்டா மாவட்டங்களில்

16.5 லட்சம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும். இதனால், தமிழகத்தில் விளைச்சல் பெருகும்.

மேட்டூரின் அணையின் உள்ள நீரின் அளவை கருத்தில் கொண்டும், தமிழகத்தில் பெய்து வரும் தென்மேற்கு பருவமழை அக்டோபர் மாதம் வரை நீடிக்கும் என கருதப்படுவதாலும் தேவையான தண்ணீர் இதன் மூலம் கிடைக்கும் என்பதை உறுதியாக நம்பலாம்.

தமிழகத்தில் மக்கள் மழை நீர் சேமிப்பு வசதிகளை அமைக்க முன் வரவேண்டும். மேலும், ஆடி வரும் நீரின் மிகையால் ஏரிகள், குளங்கள், கால்வாய்கள், ஊருணிகள், திருக்கோயில்களில் காணப்படும் திருக்குளங்கள் நிரம்பி வடியும் வகையில் அவைகளை செப்பனிட்டு, தூர்வாரி நீரை சேமித்தால் தமிழகத்தில் தண்ணீர் பற்றாக்குறை என்பது இருக்காது. குளங்களில் உள்ள ஆகாயத் தாமரை போன்ற செடிகளை அகற்ற உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

மனிதன் மாறிவிட்டான். ஆனால் இயற்கை இன்னும் மாறவில்லை. இயற்கை என்றுமே பொய்க்காது. கர்நாடகம் நம்மை கைவிட்டாலும், இயற்கை நம்மை கைவிடவில்லை.

விவசாயத்தை லாபம் தராத தொழில் என்று கைவிட்டவர்கள், மீண்டும் விவசாயப் பணியை மேற்கொண்டு அந்தக் கூற்றை பொய்யாக்க வேண்டும். விவசாய மக்கள் இல்லையேல் உலகம் இயங்காது என்பதை நிரூபிக்க வேண்டும்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**08.08.2013**

## விநாடிக்கு 14,000 கனஅடி வெளியேற்றம் சம்பா சாகுபடிக்கு கல்லணை திறப்பு



தஞ்சை : டெல்டா மாவட்டங்களில் சம்பா சாகுபடிக்காக மேட்டூரிலிருந்து கடந்த 2ம் தேதி தண்ணீர் திறந்துவிடப்பட்டது. தொடக்கத்தில் வினாடிக்கு 12 ஆயிரம் கனஅடியாக இருந்த நீர் திறப்பு, படிப்படியாக அதிகரிக்கப்பட்டு தற்போது 25 ஆயிரம் கனஅடி திறந்துவிடப்படுகிறது. மேட்டூரில் திறந்துவிடப்பட்ட காவிரி நீர் நேற்று காலை கல்லணை வந்தடைந்தது. இங்கிருந்து பாசனத்திற்காக தண்ணீர் திறந்து விடும் நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது. அமைச்சர்கள் வைத்திலிங்கம், ராமலிங்கம், ஜெயபால், காமராஜ், பூனாட்சி மற்றும் சுப்பிரமணியன் ஆகியோர் மலர் தூவியும், விதை நெல் தூவியும் மதகு பட்டனை அழுத்தி தண்ணீரை திறந்து விட்டனர்.

அப்போது, காவிரி மற்றுமஂ வெண்ணாற்றில் தலா 4,500 கன அடி, கல்லணைக் கால்வாயில் 3 ஆயிரம் கன அடி, கொள்ளிடத்தில் 2 ஆயிரம் கன அடி என மொத்தம் 14 ஆயிரம் கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டது. இந்நிகழ்ச்சியில்

எம்பி, எம்எல்ஏக்கள் உட்பட அரசு அதிகாரிகள் பலர் பங்கேற்றனர்.

நிகழ்ச்சியில், அமைச்சர் ராமலிங்கம் பேசுகையில், "ஆறுகளில் தண்ணீர் கடைமடைக்கு சென்ற பின்னர் காரைக்கால் பாசனப்பகுதிக்கு உரிய நீர் பங்கிட்டு அளிக்கப்படும். பாசன பகுதிகளுக்கு தேவைக்கேற்ப சீராக நீர் பகிர்ந்தளிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். கல்லணைதண்ணீரால் தஞ்சை மாவட்டத்தில் 4.50 லட்சம் ஏக்கர், திருவாரூரில் 3.90 லட்சம் ஏக்கர், நாகையில் 3.30 லட்சம் ஏக்கர், புதுக்கோட்டை யில் 27 லட்சம் ஏக்கர், கடலூரில் 1 லட்சம் ஏக்கர் என மொத்தம் 12.97 லட்சம் ஏக்கர் நிலம் பாசன வசதிபெறும் என பேசினார். விவசாயிகள் சங்க பிரதிநிதி ஜீவக்குமார் கூறுகையில், சம்பா சாகுபடிக்கு தேவையான தரமான விதை நெல்லை விவசாயிகளுக்கு அரசு மானிய விலையில் வழங்க வேண்டும். பயிர் சாகுபடி கடன் அளிப்பை அதிகரிக்க வேண்டும். உரங்கள் தட்டுப்பாடின்றி கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றார்.
காவிரி விவசாயிகள் பாதுகாப்பு சங்க மாவட்ட செயலர் சுவாமிமலை விமல்நாதன் கூறுகையில், 'காவிரி இடதுகரையில் பல இடங்களில் பாசன வாய்க்கால்கள் குறுக்கே சிறு பாலங்கள் கட்டும் பணியை நெடுஞ்சாலைத்துறை கடந்த 4 மாதங்களுக்கு முன்பு துவங்கியது. தாமதமாக இப்பணிகள் நடைபெறுவதால் தண்ணீர் வருவது தடைபட்டு பி, சி, டி மற்றும் கன்னி வாய்க்கால்கள், கிளை வாய்க்கால்கள் வறண்டுபோகும் நிலை ஏற்பட்டுள்ளது. இப்பணிகளை விரைந்து முடிக்க வேண்டும். அல்லது தற்காலிகமாக நிறுத்தி, வாய்க்கால்களில் தண்ணீர் செல்ல வழிவகை செய்ய வேண்டும்' என்றார்.
எக்ஸ்ட்ரா தகவல் காவிரியில் வந்த காட்டாற்று வெள்ளத்தை தடுக்க ஆற்றின் குறுக்கே கல்லணையை கட்டியவர் கரிகாற்சோழன். கி.பி.2ம் நூற்றாண்டில் காவிரி நீர் வீணாக கடலில் கலப்பதை தடுக்க இந்த அணையை கட்டினார்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## இன்றைய வேளாண் செய்திகள்

## 05.08.2013

### குளங்கள், அணைக்கட்டுகள் நிரம்பி வருவதால் 10 ஆயிரம் ஏக்கரில் விவசாய பணிகள் தொடங்கியது



கோவை கோவை மாவட்டம் பொள்ளாச்சி அருகே விவசாய நிலத்தில் உழவு பணிகள் நடைபெறுவதை படத்தில் காணலாம்.

கோவை மாவட்டத்தில் குளங்கள், அணைக்கட்டுகள் நிரம்பி வருவதால் 10 ஆயிரம் ஏக்கரில் விவசாய பணிகள் தொடங்கியுள்ளன.

**விவசாய பணிகள் தொடங்கின**

கோவை மாவட்டத்தில் பருவமழை தொடர்ந்து பெய்து வருவதால் கோவை புறநகரில் உள்ள குளங்கள் மற்றும் அணைக்கட்டுகள் நிரம்பி வருகின்றன. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். கோவை மாவட்டத்தில் உள்ள 28 குளங்களில் 7 குளங்கள் முழுவதுமாக நிரம்பி விட்டன. 10-க்கும் மேற்பட்ட குளங்கள் 75 சதவீதத்துக்கும் மேல் நிரம்பி உள்ளன. இதை தொடர்ந்து கோவை மாவட்டத்தில் விவசாய பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

இதுகுறித்து கோவை விவசாயிகள் சங்க தலைவர் வழுக்குப்பாறை பாலு கூறியதாவது-

கோவை மாவட்டம் கிணத்துக்கடவு, மதுக்கரை ஆகிய பகுதிகளில் உள்ள மானாவாரியாக உள்ள 2 ஆயிரம் ஏக்கரில் தக்காளி நடவு தொடங்கப்பட்டுள்ளது. மேலும் மதுக்கரை, பேரூர், கிணத்துக்கடவு, பொள்ளாச்சி ஆகிய பகுதிகளில் விவசாய நிலங்களை விதைப்பதற்கு தயார் படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன. கோவையை அடுத்த தொண்டாமுத்தூர், மதுக்கரை ஆகிய பகுதிகளில் 2 ஆயிரம் ஏக்கரில் சின்னவெங்காயம் அறுவடைக்கு தயாராக உள்ளன. இன்னும் 15 நாட்களில் அவை எடுக்கப்பட்டு அந்த இடங்களில் தக்காளி பயிரிட விவசாயிகள் தயாராகி வருகின்றனர்.

**10 ஆயிரம் ஏக்கர்**

ஆனைமலை, வேட்டைக்காரன்புதூர் ஆகிய சுற்று வட்டார பகுதிகளில் சுமார் 2 ஆயிரம் ஏக்கரில் நெல் விதைப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. கோவை மாவட்டத்தில் நீர்வரத்து அதிகரித்துள்ளதால் சுமார் 10 ஆயிரம் ஏக்கரில் விவசாய பணிகள் தொடங்கியுள்ளன.

இவ்வாறு அவர் கூறினார்.

**தண்ணீர் வரவில்லை**

கோவையின் புறநகர் பகுதிகளில் பலத்த மழை பெய்து வருவதால் நொய்யல் ஆற்றின் கரையோரம் உள்ள 7 குளங்கள் நிரம்பி விட்டன. ஆனால் கோவையில் உள்ள வெள்ளலூர் குளம், வாலாங்குளம் ஆகிய குளங்களுக்கு இன்னும் தண்ணீர் வரவில்லை என்று கூறப்படுகிறது. இதற்கு காரணம் இந்த குளங்களுக்கு வரும் வாய்க்கால்களில் ஆக்கிரமிப்புகள் அதிகமாக இருப்பதாக கூறப்படுகின்றன.குறிச்சி குளத்துக்கு வரும் வாய்க்காலில் பாலம் கட்டுவதாக கூறி அதன் வாய்க்கால் அடைத்து வைக்கப்பட்டிருந்தன. கடந்த 4 நாட்களுக்கு முன்பு

தான் அந்த அடைப்பு எடுக்கப்பட்டதால் குறிச்சி குளத்துக்கு கடந்த 4 நாட்களாக தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. 18 நாட்கள் தொடர்ந்து தண்ணீர் வந்தால் தான் குறிச்சி குளம் நிரம்பும் என்று விவசாயிகள் கூறுகிறார்கள்.

**ஆக்கிரமிப்பை அகற்ற கோரிக்கை**

வெள்ளலுர் குளத்துக்கு வரும் வாய்க்கால் சாரமேடு பகுதியில் அடைபட்டுள்ளதால் அந்த குளத்துக்கு இதுவரை தண்ணீர் வரவே இல்லை. கோவையின் பல குளங்கள் தற்போது நிரம்பி வருவதற்கு பொதுப்பணித்துறையினர் குளங்களுக்கு வரும் வாய்க்காலில் இருந்த ஆக்கிரமிப்புகள் மற்றும் ஆகாய தாமரைகளை முழுவதுமாக அகற்றியது தான் காரணம். எனவே அது போன்று வெள்ளலூர் குளத்துக்கு வரும் ஆக்கிரமிப்பை பொதுப்பணித்துறையினர் அகற்ற வேண்டும் என்று விவசாயிகள் கேட்டுக் கொண்டுள்ளனர்.உக்கடம் பெரிய குளம் நிரம்பினால் தான் வாலாங்குளம் நிரம்பும். ஆனால் உக்கடம் குளத்திலிருந்து தண்ணீர் வரும் வாய்க்கால் உக்கடம் பஸ் நிலையம் அருகில் அடைபட்டுள்ளதால் வாலாங்குளத்துக்கு வரும் தண்ணீர் தடைபட்டுள்ளதாக விவசாயிகள் குற்றம் சாட்டுகிறார்கள். எனவே அந்த அடைப்பை அகற்ற வேணடும் என்று விவசாயிகள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

**குன்னூர் ஏல மையத்தில் 77 சதவீத தேயிலை தூள் விற்பனை**

குன்னூர்

குன்னூர் ஏல மையத்தில் 77 சதவீத தேயிலை தூள் விற்பனையானைது. மேலும் தேயிலை தூள் கிலோ ஒன்றுக்கு 1 ரூபாய் விலை உயர்வு ஏற்பட் டது.

**தேயிலை ஏலம்**

குன்னூர் தேயிலை வர்த்தகர் அமைப்பின் சார்பில் வாரந் தோறும் வியாழன், வெள்ளி ஆகிய 2 நாட்கள் தேயிலை ஏலம் நடத்தப்படுகிறது. இந்த ஏலத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தகர்கள் கலந்து கொண்டு தேயிலை தூளை ஏலம் எடுக்கிறார்கள்.

விற்பனை எண் 31-க்கான ஏலம் கடந்த 1, 2 ஆகிய தேதி களில் நடைபெற்றது. ஏலத் திற்கு மொத்தம் 19 லட்சத்து 8 ஆயிரம் கிலோ தேயிலை தூள் வந்தது. இதில், 13 லட்சத்து 65 ஆயிரம் கிலோ இலை ரகமா கவும், 5 லட்சத்து 43 ஆயிரம் கிலோ டஸ்ட் ரகமாகவும் இருந்தது.

**77 சதவீத தேயிலை விற்பனை**

இந்த ஏலத்தில் 77 சதவீத தேயிலை தூள் விற்பனை ஆனது. இந்த ஏலத்தில் 23 சதவீத தேயிலை தூள் தேக்கம் அடைந்தது. இந்த ஏலத்தில் அனைத்து தேயிலை தூள் ரகங்களுக்கும் 1 ரூபாய் வரை விலை உயர்வு ஏற்பட் டது.சி.டி.சி. தேயிலை தூளின் உயர்ந்த பட்ச விலையாக 191 ரூபாயாக இருந்தது. ஆர் தோடக்ஸ் தேயிலை தூள் 252 ரூபாய் என்று உயர்ந்த பட்ச விலையாக ஏலம் சென்றது.

சராசரி விலையாக இலை ரக தேயிலை தூளின் சாதா ரண வகை 68 ரூபாயில் இருந்து 71 ரூபாய் வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் 115 ரூபாயில் இருந்து 150 ரூபாய் வரையிலும் ஏலம் சென்றது.டஸ்ட் ரக தேயிலை தூளின் சாதாரண வகை 68 ரூபாயில் இருந்து 74 ரூபாய் வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் 120 ரூபாயில் இருந்து 160 ரூபாய் வரையிலும் ஏலம் சென்றது.

விற்பனை எண் 32-க்கான ஏலத்திற்கு 16 லட்சத்து 50 ஆயிரம் கிலோ தேயிலை தூள் வருகிறது.